

# பொங்கல் மலர்

## 2024

வெளியீடு

சொர்க்கபூமி
தஞ்சாவூரு

பட உதவி:
suganography

# சொர்க்கபூமி தஞ்சாவூரு

என்னுடைய கல்லூரி நாட்களின் பொழுது தான் சுனாமி பேரலை வந்து சென்னை உட்பட பல கடலோர மாவட்டங்களை சூறையாடியது. அன்றைய நாட்களில் என்னால் முடிந்த சிறு, சிறு பங்களிப்பை வழங்கினேன். அதன் பின்னர் எனது பொறியியல் பட்டப்படிப்பு முடிந்து சென்னையிலேயே தகவல் தொழிற்நுட்ப துறையில் பணியாற்ற துவங்கினேன்.

ஆனால் ஒரு அறையில் வசித்துக் கொண்டு, அங்குள்ள உணவுகளை உண்ணும் பொழுது எனது சொந்த ஊரான தஞ்சையே என் மனதில் அடிக்கடி வந்து செல்லும். காரணம் இயற்கை சூழல், தூய காற்று, போக்குவரத்து, உறவுகள், நட்பு வட்டங்கள் என்று அனைத்துமே. குறிப்பாக சொல்ல வேண்டும் என்றால் உலக புகழ்பெற்ற தஞ்சை பெரியக்கோவில். உலகமே வியந்து பார்க்கும் வண்ணம் உள்ள பெரியகோவில் எங்கள் உள்ளூரில் உள்ளது என்பது எப்பொழுதுமே எனக்கு மகிழ்ச்சியை தரும்.

இந்த சூழலில் நான் மீண்டும் தஞ்சாவூருக்கு வர நேர்ந்தது. அதன்பின்னர் வேறொருவரின் முகநூல் பக்கத்திற்கு நிர்வாகியாக இருந்து வந்தேன். அதன் தொடர்ச்சியாக தனியாக துவங்கி செயல்பட வேண்டும் என்ற எண்ணம் என்னில் துளிர்விட்டது.

அதன் தொடர்ச்சியாக 2013ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 30ஆம் தேதி அன்று “இது தான்டா நம்ம ஊரு சொர்க்கம்” என்று ஒரு முகநூல் பக்கத்தை துவங்கினேன், அடுத்ததாக இசைஞானி இளையராசா அவர்களின் இசையில் வெளிவந்த “சொர்க்கமே என்றாலும் நம்ம ஊரை போல வருமா…” என்ற பாடல் வரிகளுக்கு ஏற்ப அதன் பெயரை “சொர்க்கபூமி தஞ்சாவூர்” என்று மாற்றினேன்.

இருப்பினும் பக்கத்தின் பெயரில் மண்வாசனை வந்தால் நன்றாக இருக்குமே என்று “சொர்க்கபூமி தஞ்சாவூரு” என்று மாற்றினேன். அந்த பெயர் தான் இன்றுவரை தொடர்ந்து வருகிறது.

ஒரு முகநூல் பக்கமாக மட்டும் இல்லாமல், களத்தில் நம்மால் இயன்றவரை பங்களிக்க வேண்டும் என்பதை மனதில் நிறுத்தி பணியாற்ற துவங்கினேன். இதன் மூலம் பலரின் பொருளாதார உதவியுடன், களப்பணியாளர்களுடன் ஏழ்மையில் உள்ளவர்களுக்கு கல்விக்கான உதவி, மாற்றுத் திறனாளிகளுக்கான சக்கர நாற்காலிகள், பெண்களுக்கான தையல் இயந்திரங்கள், இசுதிரிபெட்டிகள் என வழங்கி வருகிறோம். தஞ்சையில் பசுமை நிலைத்து நிற்க இயன்றவரை மரக்கன்றுகளை நட்டு பராமரித்து வருகிறோம்.

மழைக்காலங்களில் சாலையோரங்களில் உள்ளவர்களுக்கு அவர்கள் குளிர்காலத்தை கடக்க போர்வைகளை இலவசமாக வழங்கினோம். மேலும் கஜா புயலின் பொழுது ஏற்ற இயற்கை சீற்றங்களில் இருந்து மக்கள் மீண்டு வர எங்களால் ஆன வரை பங்களித்தோம். உதாரணத்திற்கு வீடுகளை சீர்செய்து கொடுத்தோம், சிலருக்கு வீடுகள் கட்டிக்கொடுத்தோம், உணவுகள், ஆடைகள் என வழங்கினோம். கஜா புயல் நாட்கள் நாங்கள் எதிர்கொண்ட நாட்களிலேயே மிகவும் கடினமான நாட்கள் எனலாம்.

அடுத்ததாக கொரோனா பேரிடர் காலத்தில் உணவில்லாமல் தவிர்த்தவர்களுக்கு உணவு வழங்கினோம்.

பயணம் சுவாரசியமானது, அந்த பயணத்தின் பெரும்பகுதி நம் மண்ணிலே அமைவது அதைவிட சுவாரசியமானது என்பேன்.

இந்த பயணத்தில் என்னுடன் பயணித்த, பணிக்கும் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்து கொள்கிறேன்.

அனைவருக்கும் இனிய பொங்கல் நல்வாழ்த்துகள்!



—

**திரு. ஆறுமுகம் கணேசன்,**
நிறுவனர் - சொர்க்கபூமி தஞ்சாவூரு,
பகிரி: +91 98941 50472
மின்னஞ்சல்: arumugham85@gmail.com

# பொங்கல் பொங்குக! மங்களம் தங்குக!

தைத்திங்கள் கொண்டாடும்
தைப்பொங்கல்

பொங்கல் விழா தமிழர் உலகம்
உரக்கச் சொல்லும் இது எங்கள் விழா

பொங்கல் உணவுத் திருவிழா அல்ல
இது தமிழர் உணர்வுத் திருவிழா

தை முதல் நாள்
புத்தாடை மேனியில் பூக்கும்
புத்துணர்வு மனவலியை நீக்கும்

கதிரவனின் கரங்கள் நமக்கு
வரமாகட்டும் வெல்லத்தின் இனிமை
உள்ளத்தின் வரவாகட்டும்
கரும்பின் சுவையில் வாழ்க்கை
வசமாகட்டும்

மஞ்சள் மகிமை மங்கலத்தை
கொடுக்கட்டும் பரவும் நோயை அது
தடுக்கட்டும்

புதுப்பானையில் புத்தரிசியில்
பொங்கும் பொங்கச் சோறு
இது தமிழர் காலம் காலமாய்
கொண்டாடும் முத்தமிழ் சங்கச்சோறு

குலவை சத்தம் கிழக்கினை எழுப்பட்டும்
பொங்கும் இன்பம் வாழ்வின்
கோடிட்ட இடத்தை நிரப்பட்டும்

விசில் சத்தத்தை விரட்டி அடிப்போம்
குலவை சத்தத்திற்கு கூடுதல் ஒளி
கொடுப்போம்

கிராமம் நோக்கி படையெடுப்போம்
குக்கர் பொங்கலுக்கு விடை
கொடுப்போம்

அனைவரின் இல்லத்தில்
பொங்கல் பொங்கட்டும்
மங்களம் தங்கட்டும்

—

*சீ. பாஸ்கர்,*
75 B , வ. உ. சி தெரு,
தங்கப்பாபுரம்,
பெருமாட்டுநல்லூர்,
கூடுவாஞ்சேரி.
செங்கல்பட்டு மாவட்டம் - 603202
அலைபேசி : 9941147699



அனைவருக்கும்

# இனிய பொங்கல் நல்வாழ்த்துகள்!



## KISHORE HOMES

Government Approved - Grade1

Structural Engineer in Tnj Corp

Registered Engineer in DTCP



பொறியாளர்:

**வே.லெனின்,**

B.E., F.I.V., M.I.E., C.E (I).,
Planner, Builder, Approved Valuer & Chartered Engineer
சாசனத்தலைவர், கட்டுமானப் பொறியாளர்கள் சங்கம், தஞ்சாவூர்.

33, விவேகானந்தா நகர், மருத்துவ கல்லூரி சாலை, தஞ்சாவூர் - 613 004
அழைக்க: 9655226397 | leninkishore@yahoo.com
kishorehomes.in@gmail.com

# கணேச மூப்பனார் அறக்கட்டளை

"மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை
என்நோற்றான் கொல்எனும் சொல்"
- திருவள்ளுவர்

மகன், தந்தைக்குச் செய்யும் உதவி இவன் தந்தை இவனை மகனாகப் பெற என்ன நோன்பு செய்தானோ என்னும் புகழ்ச் சொல்லே ஆகும்.


அந்த வகையில் அரியலூர் அருகே புஜங்கராய நல்லூர் (பேரையூர்) கிராமத்தில் பிறந்து இந்தியன் வங்கி முதுநிலை மேலாளராக இந்திய ஒன்றியத்தின் பல மாநகரங்களில் பணியாற்றிய காலங்களில் தன்னால் இயன்றவரை மக்களுக்கு நன்மைகள் செய்து வந்தார் எனது தந்தை ஐயா. திரு. N. கணேச மூப்பனார் அவர்கள்.

அவரின் மறைவிற்கு பிறகும் அவரின் பெயரில் இந்த சமூகத்திற்கு பங்களிக்க வேண்டும் என்று எண்ணி 2018ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15ஆம் தேதி அவரின் நினைவாக "கணேச மூப்பனார் அறக்கட்டளையை" துவங்கி ஏழ்மை நிலையில் உள்ள பிள்ளைகளுக்கு கல்வி உதவி தொகையை வழங்கி வருகிறோம், மேலும் மருத்துவத்திற்கான உதவிகளையும் பல நல்லுள்ளங்களின் நிதி உதவியுடன் வழங்கி வருகிறோம்.

அனைவருக்கும் இனிய பொங்கல் நல்வாழ்த்துகள்!!

—

திரு. ஆறுமுகம் கணேசன்,
நிறுவனர் - கணேச மூப்பனார் அறக்கட்டளை,
பகிரி: +91 98941 50472
மின்னஞ்சல்: arumugham85@gmail.com



15 ஆம் ஆண்டில் / 15th Year

# ஸ்ரீ சாரதா பிசியோதெரபி கிளினிக்
# SRI SARATHA PHYSIOTHERAPY CLINIC

காமராஜ் சாலை, சீனிவாசபுரம், தஞ்சாவூர்

21 A, ஜெயமணி காம்ப்ளக்ஸ், பழைய ஹவுசிங் யூனிட் எதிரில்,
புதுக்கோட்டை ரோடு, தஞ்சாவூர்.

A.V.P அழகம்மாள் நகர், வேலம்மாள்பள்ளி அருகில்,
புதிய பேருந்து நிலையம், தஞ்சாவூர்.



**Dr.V.BALAKUMARAN** MPT(Neuro)MIAP..

## ROLE OF PHYSIOTHERAPY
## பிசியோதெரபி சிகிச்சையின் பலன் :

**முடநீக்கியல் - ORTHO**

- கழுத்து வலி - CERVICAL SPONDYLOSIS
- முதுகு வலி - LUMBAR SPONDYLOSIS
- விரல்களின் வலி நீக்கம் - RHEUMATOID ARTHIRITIS
- குதிங்கால் வலி - PLANTARFASCITIS
- எலும்பு முறிவுக்குபின் ஏற்படும் மூட்டு இயங்காமை தசை இருக்கம் - STIFFNESS, CONTRACTURE
- மூட்டு மாற்று அறுவை சிகிச்சைக்குப் பின் AFTER JOINT REPLACEMENT

**நரம்பியல் - NEURO**

- பக்கவாதம் - PARALYSIS / STROKE
- நடுக்குவாதம் - PARKINSONIM
- முகவாதம் - FACIAL PARALYSIS
- தண்டுவட கோளாறு - SPINAL DISORDERS
- மூளைவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு சிறப்பு பயிற்சி - CELEBRAL PALSY

சர்க்கரை நோயாளிகளுக்கு ஏற்படும் ஆறாதா புண்களுக்கு லேசர் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

## TREATMENT AVAILABILITY:

* IFT (Interferential Therapy) * TENS * Stimulation
* Electronic Tractions * Ultrasonic Therapy (US) * Short Wave Diathermy (SWD)
* Continuous Passive Motion (CPM) * Laser Therapy * PNF * NDT * Manipulation Mobilisation
* Frenkel's Exercises * Pregenancy Exercises * Breathing Exercises



சாய் ஷார்வி சர்ஜிகல்ஸ்,
சர்ஜிகல் பொருட்கள் அனைத்தும் கிடைக்கும்.

99435 11745
94879 89539

# இளகிய மனசும்... இணைந்த உள்ளமும்...

முகிலனும் அகிலனும் இரட்டைப் பிறந்த சகோதரர்கள். இருவரும் கல்லூரி மூன்றாமாண்டு மாணவர்கள்.

வீட்டிற்கு பக்கத்திலேயே கல்லூரி சம்மந்தமாக வேலை கொஞ்சம் இருப்பதாக, அம்மாவிடம் கூறி பணத்தை பெற்றுக்கொண்டு, அகிலனும் முகிலனும் இருசக்கர வாகனத்தில் கிளம்பினார்கள்.

வேலைகளை முடித்து விட்டு வரும் பொழுது, சரியான உச்சி வெயில் மண்டையை பிளக்க, " டேய்... முகிலா, வண்டியை அதோ.. சர்பத் கடை தெரியுதுல.. அங்க நிறுத்தறியாடா..? , ஒரு சர்பத் குடிச்சிட்டு போவோம், வெயில் தாங்க முடியலடா." என்றான் அகிலன்.

சரியென தலையசைத்தே, நகர்ந்து சென்று நிறுத்த எத்தனிக்கும் போது, அந்த சர்பத் கடையின் ஓரத்தில், ஒரு பத்து வயது மதிக்கத் தக்க, பெண் குழந்தை ஒன்று, கிழிந்த ஆடையுடன் நின்று கையேந்தி கொண்டிருந்ததை, அகிலன் கவனித்தே வண்டியை ஓரங்கட்டி நிறுத்தினான்.

அந்தக் குழந்தை, இவர்களை கண்டதும் வேகமாக ஓடி வந்து, "அண்ணே... அண்ணே... ரொம்ப பசிக்குதுணே , ஏதாவது சாப்பிட வாங்கி கொடுங்கண்ணே..." எனக் கெஞ்சுவதை பார்த்த இருவரும் அந்த குட்டிக் குழந்தையிடம் பேச்சுக் கொடுத்தனர்.

அகிலன் அந்த குழந்தையிடம், " ஏன் பாப்பா இப்படி கையேந்திட்டு இருக்க..? , உனக்கு அப்பா அம்மா இருக்காங்களா..?" சொல்லு பாப்பா என்றவுடன் ஒவென கதறி அழ ஆரம்பித்தது.

முகிலனோ.., " அழாதே பாப்பா, வா முதலில் சர்பத் குடி, பிறகு பேசுவோம்" என்று கூறி, கடைக்காரரிடம், "அண்ணே மூணு சர்பத் கொடுங்க" , என வாங்கி குடிக்க ஆரம்பித்தனர் மூவரும்.

அந்த குழந்தையும் அழுகையை குறைத்து, மட மடவென குடித்து முடித்தது. அடுத்ததாய் சகோதரர்கள் இருவரும்.., "பாப்பா சாப்பிடுறியாமா...?", என்றவுடனே சரியென்றது.

வண்டியை சர்பத் கடை வாசலிலேயே விட்டு விட்டு, அருகில் உள்ள உணவகத்திற்கு அழைத்துச் சென்று, சாப்பிட உணவை கொண்டு வர செய்து விட்டு, அகிலன் முகிலனிடம் "டேய்.. சாப்பாடு வந்ததும் சாப்பிட வை டா, நான் இதோ வந்திடறேனு சில ரூபாய் நோட்டுகளை சகோதரன் கையில் திணித்து விட்டு வெளியேறினான்." , அந்த குழந்தையை

சாப்பிட வைத்துக் கொண்டே பேச்சுக் கொடுத்தான் முகிலன்.

"பாப்பா.. நீ எப்படி இங்க வந்த..?, நீ சொன்னால் தான்,எங்களால முடிஞ்சத செய்ய முடியும்டா" என்றான். குழந்தை கொஞ்சம் சாதரண நிலைக்கு வந்து பேச ஆரம்பித்தது.

" அண்ணே.. என் சொந்த ஊரு தஞ்சாவூர் பக்கம் மன்னார்குடி. நான் சின்ன புள்ளையா இருக்கும் போதே அம்மா இறந்துட்டாங்க னு அப்பா சொல்லுவாரு.அப்புறமா எனக்காக இன்னொரு அம்மாவ அழைச்சிட்டு வந்தாரு.." அப்புறம்... அப்புறம்... என பேச்சு தடுமாறி மீண்டும் அழ ஆரம்பிக்க..

"சரி பாப்பா.. ப்ளீஸ்... அழாதே முதலில் சாப்பிடு" என்றவுடன், பல நாள் பசி என்பதை போல அவ்வளவு வேகமாய் சாப்பிட்டு முடிக்கும் நேரத்தில், வெளியே சென்ற சகோதரனும், ஒரு பையோடு வந்து சேர்ந்தான்.

குழந்தை... சாப்பிட்டு விட்டு கை கழுவ சென்ற பின்.., " டேய்...முகிலா.. இதுல அந்த பாப்பாவுக்கு புது துணி இருக்குடா.. இந்த உணவகத்துல மாத்த முடியாதுல.. பக்கத்துல ஒரு வீடு இருக்கு.. அந்த அக்காகிட்ட அனுமதி கூட வாங்கிட்டேன்டா.. நம்ம அங்க அழைச்சிட்டு போவோம் முதல்ல.. மத்தத அப்புறமா பேசுவோம்டா" என்றான்.

" ஏய்.. ஏதுடா பணம் உன்கிட்ட  துணி எடுக்குற அளவுக்கு இருந்துச்சு." என்றான். " "இல்லடா., அந்த பாப்பா சட்டை கிழிஞ்சிருந்தது பார்க்கவே கஷ்டமாவும், அந்த குழந்தைக்கு யாராலாவது ஆபத்து வந்திடுமோனும் பயமா இருந்துச்சுடா.. அதான், அப்பா அவசரத்துக்கு தேவைப்படும் னு ஐநூறை பர்சுல வச்சுக்க சொல்வார்ல அந்த பணத்துல வாங்கிட்டேன்டா.." எனக் கூறியவுடன் முகிலனுக்கும் சந்தோசம் தான்.

உணவகத்தில் பில்லை கட்டி விட்டு குழந்தையை, அந்த பக்கத்து வீட்டு அக்காவிடம் அழைத்துச் சென்று ஆடை மாற்ற அனுப்பி விட்டு.. அகிலனும் முகிலனும் அவ்வீட்டு திண்ணையில் காத்திருந்தனர்.

ஆடையை மாற்றி விட்டு, அந்த வீட்டு அக்கா அழைத்து வந்தார். குழந்தையோ.."ரொம்ப நன்றிண்ணே...அழகாயிருக்கு ட்ரஸ்.எங்கப்பா கூட இப்படிதான் எடுத்து தருவாருண்ணே" என்றவுடன் , இருவருக்கும் மகிழ்ச்சி.

சகோதரர் இருவரும் அந்த அக்காவிற்கு நன்றி கூறினர். அவர் "ஏன் தம்பி நன்றியெல்லாம்.. இந்த காலத்துல  பசங்கனாலே அதிகமா, தப்பான எண்ணம் தான் இருக்கும், ஆனா நீங்க வித்தியாசமா இருக்கீங்க.. நல்லதே நடக்கும் குழந்தைக்கும் உங்களுக்கும் போய்ட்டு வாங்க" என வழியனுப்பி விட்டு, அவர் வேலையை கவனிக்க சென்றார்.

அகிலன் வாங்கி வந்திருந்த பாவாடை சட்டை அந்த குழந்தைக்கு கச்சிதமாக அழகாய் இருந்ததை அவன் கவனிக்க தவறவில்லை.

வேற்றுயிடம் நோக்கி மூவரும் செல்ல மனமில்லாமல்..அதே திண்ணையில் அமர்ந்தனர். மேற்கொண்டு, குழந்தையிடம் முகிலன் பேச ஆரம்பித்தான்.

குழந்தையும்.. "அப்புறம்ண்ணே அந்த ரெண்டாவது அம்மாவும் அடிபட்டு போன மாசம், செத்து போச்சுண்ணே.. என்னை அதுக்கு அவ்வளோ புடிக்கும். விதவிதமா சமைச்சு எல்லாம் கொடுக்கும், புது ட்ரஸ் நிறையா எடுத்து தரும், ஹேர்ஸ்டைல் கூட சூப்பரா பண்ணி விடும்ண்ணே.." என்ற அழ ஆரம்பித்ததை சமாதானப்படுத்தினார்கள் இருவரும்.

சரி பாப்பா.. "நீயெப்படி கடலூர் வரை வந்த..?" யாராவது விட்டுட்டு போய்ட்டாங்களா.." என்றவுடன்... "நானா தான் கிளம்பிட்டேன். உண்டியல்லகொஞ்ச காசு வச்சிருந்தத எடுத்துட்டு வந்துட்டேன்." திரும்ப வீட்டுக்கு போக மாட்டேன் அண்ணே." என்றது.

திகைத்த இருவரும்.. சரிடா "ஏன்டா வீட்டை விட்டு வந்த.." என அகிலன் கேட்க, அது வந்துண்ணே "என்னோட முதல் அம்மாவும் செத்துடுச்சு, ரெண்டாவது அம்மாவும் செத்து போச்சு, அதனால அப்பா எனக்காக, இன்னொரு அம்மாவ அழைச்சிட்டு வந்தா அதுவும் செத்து தானே போவும், அதாண்ணே வீட்டை விட்டு வந்துட்டேன்" என இரு தாய்களையும் இழந்து மழலை மொழியில், அதற்கே உண்டான தொணியில், கண்டிப்பாக வீடு செல்ல மாட்டேன் என பேசியது.

சரி பாப்பா.. "அப்பா பாவம் தானே..அப்பாவுக்காக கூட இருந்து பாத்துக்கலாம்ல நீ.." என்றான் முகிலன். "இல்லேண்ணே நான் போக மாட்டேன்.. என்னை அநாதை ஆசிரமத்துல சேத்து விடுறியாண்ணே.. ரோட்டுல தனியா இருக்க பயமாயிருக்குண்ணே... ரெண்டு நாளைக்கு முன்ன கூட, யாரோ ஒருத்தவங்க எனக்கு புது துணி சாக்லேட் லாம் கொடுத்து காருல கூப்பிட்டாங்க.. நான் தப்பிச்சு ஓடி ஒளிஞ்சிக்கிட்டேன் அண்ணே.." என்றதும் பதறி போனார்கள் இருவரும்.

இப்படியும் மனிதர்களா...என நினைத்துக் கொண்ட அகிலன், "பாப்பா எவ்வளோ நாளா நீ இங்க இருக்க " என்றவுடன்.

"நான் 25 நாளா இங்க சர்பத் கடைக்கிட்ட தானே இருக்கேன். நைட்டுல ரொம்ப பயமாயிருக்கும் ஒரு பாட்டி வந்து படுத்துக்கும் கூட.. காலைல போயிடும்ண்ணே", "நேத்து அந்த பாட்டியையும் சொந்தகாரங்க வந்து அழைச்சிட்டு போய்ட்டாங்கண்ணே.. என்னையும் கூப்பிட்டுச்சு ஆனா அந்த பாட்டி சொந்தக்காரங்க வேணாம்னுட்டாங்க

அண்ணே" என்றாள்.

சரியென, குழந்தையிடம் மெல்ல பேச்சுக் கொடுத்ததில் ஓரளவு விலாசம் தெரிய வர, தன் தந்தை காவல்துறையில் உள்ளவர் என்பதால் அலைபேசியில் விவரத்தை சொல்லி, காவல் நிலையத்திற்கு அழைத்து போனார்கள் அகிலனும் முகிலனும்.

அங்கு சென்றதும் தான் அந்த குழந்தை குடும்பத்தை பற்றிய மற்ற விவரங்கள் தெரிந்தது. அகிலன் "அப்பா உங்கிட்ட கொஞ்சம் பேசனும்ப்பா" என்றான்.

"சரி டா வா " என்றதும் "முகிலா நீயும் வாடா" என்றான். தன் தந்தையிடம் பேச்சு வார்த்தை முடித்துக் கொண்டு... குழந்தையின் விருப்பப்படி ஆசிரமத்திற்கு அழைத்து சென்றார்கள் இருவரும். தந்தை முன்கூட்டியே அலைபேசியில் ஆசிரமத்தில் பேசிவிட்டதால் குழந்தையை விட்டு விட்டு , வீடு திரும்பினார்கள் இருவரும்.

மூன்று நாட்கள் கடந்தது. இரட்டை சகோதரர்கள், தன்னுடைய தாயையும் தந்தையும் அதே ஆசிரமத்திற்கு அழைத்துச் சென்று, சட்டப்படி அந்த குழந்தையை தங்களுடைய தங்கையாக தத்தெடுத்து அழைத்துக் கொண்டு, ஐவருமாய் கிளம்பினர்.

அகிலனோ... தன் தந்தையிடம் காவல் நிலையத்தில் பேசியதை நினைவில் நிறுத்தினான். "அப்பா.. அந்த பாப்பாவோட அப்பா இறந்தது அவளுக்கு தெரிய வேணாம். பாப்பாவை ஆசிரமத்துல விட மனசேயில்லை எங்களுக்கு.. முறைப்படி அந்த பாப்பாவை நம்ம ஏத்துக்குவோம்ப்பா.. அம்மாவும் ரொம்ப சந்தோசப்படுவாங்க " என்றவுடன், எதற்குமே தலையசைக்காத அப்பா, இதற்கு இவ்வளவு சீக்கிரத்தில் சம்மதித்ததை நினைத்து, காரை ஓட்டிக் கொண்டிருந்தான்.

அவர்களுடைய கார், ஐவரோடு குல தெய்வ கோவிலை நோக்கி, விரைந்து கொண்டிருந்தது.

- முற்றும்.

சாலைகளில் இந்த குழந்தையை போன்ற எத்தனையோ உள்ளங்கள் இது போல நடமாடிக் கொண்டிருக்கலாம் சற்றே கவனித்து நடப்போம்.

—

இலக்கியா இளவரசன், MCA,
மன்னார்குடி.

## 1) அரசுப் பேருந்துகளும்

அலங்காரமிட்டே செல்கிறது...
வண்ண விளம்பரங்களினூடே...

*2)* தள்ளுவண்டி தாத்தாவின்
வறுமையின் அடையாளம்...
நெஞ்சோரத்தில் தொங்கும்
கயிறிட்டு கட்டப்பட்ட
மூக்குக் கண்ணாடி...

*3)* முந்திச் செல்வதிலும்...
முட்டிக் கொள்வதிலும்...
முதலிடம் வகிக்கின்றன..
முட்டுச் சந்துகள்...

*4)* சாலைகளின் கச்சேரிகளாய்
தினமொரு அரங்கேற்றம்...
அவசர ஊர்திகளின்
அலறல் சத்தம்..

*5)* ஞாயிற்றுக்கிழமை
தரவரிசைப் பட்டியலிலும்
காத்திருப்பு வரிசையில்
ஆப்பாவில் அடைத்த
மீன்கள்...

—

இலக்கியா இளவரசன், *MCA,*
மன்னார்குடி.




**#6, பத்மாவதி நகர், ரெட்டிபாளையம் சாலை, தஞ்சாவூர் - 9**
**அழைக்க: 8110839676**




ஓவியம்:
**க. ஆப்ரா பாத்திமா,**
ஒன்பதாம் வகுப்பு,
தூய இதய மகளிர்
மேல்நிலைப் பள்ளி,
தஞ்சாவூர்.

ஓவியம்:
**மா. நிரல்யா,**
முதல் வகுப்பு
சிங்கப்பூர்.



# மீண்டும் உயிர்பெறுமா பொய்க்கால் குதிரை?



காலத்திற்கு ஏற்ப புதிய புதிய கலைகள் அறிமுகம் ஆனாலும், காலத்தால் அழியாத நம்முடைய கிராமிய கலைகளை தொடர்ந்து உயிர்ப்புடன் வைப்பது நம் அனைவரின் கடமை. அந்த வகையில் தனது 7 வயதில் கிராமிய நடனம் ஆட துவங்கிய ஐயா. ராஜரெத்தினம் அவர்கள் தன்னுடைய 63வது வயது வரை பல்வேறு கிராமிய கலைகளை இந்த மண்ணில் உயிர்ப்புடன் வைத்து இருந்தார் என்றே கூற வேண்டும். அந்த அளவு கிராமிய கலையின் மீதும் பொய்க்கால் குதிரை கலையின் மீதும் அளவுக்கு அதிகமாக பற்றை வைத்து இருந்தார்.

திருமணத்திற்கு பின்னர் அவர் தன்னுடைய கலை பயணத்தை மனைவி திருமதி. பானுமதி அவர்களுடனே தொடர்ந்துள்ளார். மேலும் சிங்கப்பூர், இலங்கை, மலேசியா, மஸ்கட், பிரான்சு போன்ற நாடுகளுக்கு கலை பயணமாக சென்று வந்துள்ளார்கள். மற்றும் வீரம் திரைப்படத்தில் கூட இடம்பெற்றுள்ளார்.

இவர்கள் “கலைசுடர்மணி, கலைநன்மணி” போன்ற விருதுகளை பெற்றுள்ளார்கள்.

திருமணத்திற்கு முன்னர் திருமதி. பானுமதி அம்மையார் அவர்கள் கரகாட்டம் ஆடி வந்துள்ளார், அதன் பின்னர் தன் கணவருடன் குறவன், குறத்தி நடனம் ஆடி வந்துள்ளார். கடந்த 45 ஆண்டுகளாக தன்னுடைய கலை பயணத்தை தொடர்கிறார் இந்த அம்மையார்.



தனது கணவரின் மறைவிற்கு பின்னர் கூட இந்த கலையை அடுத்த தலைமுறைக்கு கலைப் பண்பாட்டு துறையின் வழியாக பொய்க்கால் குதிரை, கரகம்,

காவடி போன்ற கற்பிக்க தன் சார்பில் விண்ணப்பித்துள்ளதாக திருமதி. பானுமதி அம்மையார் அவர்கள் தெரிவித்தார்.

மேலும் முன்பெல்லாம் குறவன், குறத்தி நடனத்தை 40 வயது வரை கூட ஆடியுள்ளார்கள். ஆனால் தற்பொழுது 20 வயது குறைவானவர்களை ஆட அழைக்கிறார்கள் மற்றும் ஆடை கட்டுப்பாடுகளும் பெரிதாக இல்லை. இதனால் இந்த நடனத்தை பார்ப்பவர்களும் முகம் சுழிக்கும் வகையிலேயே அமைகிறது என்பதை உணரும் பொழுது நெருடலாக உள்ளது என்றார்.

பாரம்பரிய கிராமிய கலைகளை மீட்கவும், அவர்களின் வாழ்வாதாரத்தை உறுதி செய்யவும் நம்முடைய வீடுகளில் நடைபெறும் திருமண வரவேற்பு போன்ற நிகழ்ச்சிகளில் இவர்களை போன்றவர்களை அழைக்கலாம். இதன் மூலம் நமது கலைகள் பற்றிய வரலாற்றை நமது பிள்ளைகளுக்கும் கொண்டு சேர்க்கலாம்.

தொடர்புக்கு:
R. பானுமதி ராஜரெத்தினம்,
(கிராமிய கலைக்குழு)
குந்தலகார தெரு,
வடக்கு வாசல் அஞ்சல்,
தஞ்சாவூர் - 613 008.
தொடர்புக்கு: 98944 83568

—

தகவல் சேகரிப்பு:
திரு. ஆறுமுகம் கணேசன்,
நிறுவனர்,
சொர்க்கபூமி தஞ்சாவூரு.



# கூலி கிடைத்ததும்

ஆக்காதே காலி..
சேமிப்பு ஒன்றே
நமக்கான வேலி..
கண்டபடி செய்யாதே
வீண் செலவு..
சேமித்து வை
சிறு அளவு..

நன்றாகத்தான் இருக்கு கருவறையில்
சாமி..
கடைசிவரை செழிப்பாய்
வாழ சேமி..
ஒருமுறை வாங்கிவிட்டால்
போதும் கடன்..
மறுமுறை வாழமுடியாது
நிம்மதி உடன்..

சேமிப்பு வைத்தால் கையேந்தவிடாதபடி
காக்கும்..
சேமிக்கா விட்டால்
கடனாளி ஆக்கும்..
இன்று சேமித்த
ஒரு பங்கும்..
நாளை பெரு
வெள்ளமாய் பொங்கும்..

கூலி கரைய
பல வழி..
சிக்கனமாய் பார்த்து
பார்த்து செலவழி..
சேமிக்க வழிகள்
பல இருக்கு..
தேர்ந்தெடுத்து செல்வத்தை
நீயும் பெருக்கு..


---------

## அன்று நாடெங்கும் நூறு சதவீத முழுக்காடு...

இன்று இருக்கிறது ஒரு சதவீத
விழுக்காடு...
பெருமையாக எங்க வீடு
எங்க நாடு...
பேசியது போதும் யோசி
எங்கே காடு...?

—

நெற்களஞ்சியக்கவி.
தஞ்சை விஜய்,
தெற்கு நத்தம்.











**A. ஸ்ரீ நந்தினி**, பத்தாம் வகுப்பு,
தூய இதய மகளிர் மேல்நிலைப் பள்ளி,
தஞ்சாவூர்.

இனிய பொங்கல் நல்வாழ்த்துகள்!!

GRAACE AUDIO VISSION

Dealer

LED TV, Home Theater, DVD Player, CCTV Camera, Home Invertors, Intercom Telephones, P.A. Systems, & LED TV Stands

1645, 46, தெற்கு முதன்மை சாலை, ரம்யா எலக்ட்ரானிக்ஸ் மேல்தளம்,
தஞ்சாவூர் - 613 009, தமிழ்நாடு | அழைக்க: 63812 55509

RAMYA
Electronics

Sun Direct, Airtel, Tata Play, Videocon, Invertor, Telephones, Amplifiers, Speakers, USB, Player, Home Theater, DVD Player, All Remotes, Computer Spares, P.A. Systems etc.,

All DTH & Mobile Recharge Point

1646, தெற்கு முதன்மை சாலை,
தஞ்சாவூர் - 613 009

அழைக்க: 98424 38178




SUN DIRECT



அனைவருக்கும் இனிய பொங்கல் வாழ்த்துகள்!!

## விருப்பப் படி உறங்க முடிகிறது



விரும்பிய திரைப்படத்தை
முழுதாய் பார்க்க முடிகிறது...

பல நாட்களுக்கு முன்பு வந்த
குறுஞ்செய்தி கேள்விகளுக்கு
பொறுமையாக பதில் தரமுடிகிறது,
முன்பொரு நாள் யாரோ
ஒருவன் தந்த காயத்திற்கு
எனக்கே என்னால் ஆறுதல்
சொல்லப்படுகிறது...

இதற்கு முன்பு குழந்தைகள் கேட்ட
கதைகள் கேட்காமலேயே
சொல்ல முடிகிறது...

வீட்டில் வளர்க்கப்படும்
செடியில் பூக்கும் பூக்களை
வாடிப்போவதற்கு
முன்பே பார்க்க முடிகிறது,
புகைவண்டியின் சத்தம்
கேட்டு குரைக்கும் நாயின்
சத்தத்தை தெளிவாய் உணரமுடிகிறது...

விடுமுறை நாளின் முதல்நாள் இரவுகள்
எப்போதும் பிடித்ததாகயிருக்கிறது...
பிடிக்காத புத்தகங்களின்
பிடித்த ஒரு பக்கமாய்!

—

மு. முபாரக்,
திருச்சி | கைப்பேசி: *8148395936*




WE SELL & SERVICE
Laptop (All Brands)
Computer
Printers
UPS
CCTV
Smart TV
Ink Bottle
Toners
LED Display
SIGMAH
COMPUTERS
Sales, Service & Support
No Holidays
365 Days
Working for you
2856, மேரிஸ் கார்னர், மேம்பாலம், கிருஷ்ணா ஸ்வீட்ஸ் மாடியில்,
தஞ்சாவூர் - 613 001 | 96299 65358 | 99655 38358


INSIDE
Salon & Spa
We are specialist in
Bridal Make up
Professional Beauty Parlour
2856, மேரிஸ் கார்னர்,
மேம்பாலம்,
கிருஷ்ணா ஸ்வீட்ஸ் மேல்தளம்,
தஞ்சாவூர் - 613 001
Mobile: 99655 38358 | 96299 65358

# ஏர் பிடிக்கும் இன்பம்

ஏர் பிடிக்கும் உழவன்
இவன் பார் போற்றும் வளவன்

உழவன்
உண்மையான மண்ணின் மைந்தன்
மண்ணின் மருத்துவன்
மலட்டு நிலத்திற்கு ஏர் ஊசி குத்தி மலர் பூக்க வைப்பான்

மண் தாளில் உழவன் ஏர் பிடித்து எழுதும்
விதை எழுத்துகள் விளைச்சல் கவிதை வாசிக்கிறது

அழுத நிலம் - உழவன் ஏர் பிடித்தால் ஆகும்
அமுத நிலம்

விவசாயி தொழிலாளி அல்ல - நமக்கு
சோறு போடும் முதலாளி

ஏர் பிடித்தால் இன்பம் - அது இறந்த காலம்
உழவர்கள் வாழ்வில் பெரும் துன்பம்
இது நிகழ்காலம்
கணினியில் கை வைப்பவர்கள்
கழனியில் கால் வைத்தால் எதிர்காலம்

மெல்ல அழிந்து வரும் விவசாயம்
வேகமாக நலிந்து வரும் விவசாயி

வானம் போல மனம் படைத்தவன்
இன்று வானம் பார்த்து
விளைச்சலுக்கு மழையையும்
விற்பனைக்கு நல்ல விலையையும்
எதிர்பார்த்து

வியாபாரிகள் விலை நிர்ணயிப்பது
விளைச்சலுக்கு மட்டுமே - வியர்வைக்கு அல்ல
நிலத்தில் வியர்வை சிந்தியவன்- இன்று
வாழ்வில் விழிநீர் சிந்துகிறான்

நெல் வளர்த்து சோறு போட்ட நிலத்தை
இன்று கல் வைத்து கூறு போடுகிறான்

கணினியிலும் கைபேசியிலும்
அரிசியை பதிவிறக்கம் செய்தல் ஆகாது
அறிவியல் ஒரு போதும் அதற்கு உதவாது

உணவில்லை எனில் ஜகத்தினை
அழித்திடுவோம் என்றான் பாரதி
உழவனே இல்லை எனில்?

உழவுக்கு உயிர் கொடுப்போம்!
உழவன் நமக்கு உயிர் கொடுப்பான்

உழைக்கும் உழவர்களுக்கு
உழவர் திருநாள் வாழ்த்து சொல்ல
பூங்கொத்திற்கு பதிலாக - பூ மரம்
கொடுத்து சாமரம் வீசுவோம்
உலகம் முழுக்க உழவு மொழி
பேசுவோம்.

--

சீ. பாஸ்கர்,
பெருமாட்டுநல்லூர், கூடுவாஞ்சேரி,
அலைபேசி : 9941147699

# பசியில்லா தஞ்சாவூரு

எல்லோர் வாழ்விலும் பசி என்பதை உணர்ந்து இருப்போம். அது அனைவரையும் சந்தித்துவிட்டே செல்லும். ஆனால் பசியோடு உள்ள ஒரு மனிதருக்கு ஏற்படும் உளவியல் சிக்கல்களை சொற்களில் விவரிக்க முடியாது. அந்த அளவு கொடுமையானது அந்த பசியென்ற ஒன்று.

கொரோனா பேரிடர் காலத்தின் பொழுது சாலையோரங்களில் உறங்கும் பலருக்கு உணவில்லாமல் தவித்தார்கள். அன்றைய நாட்களில் பலராலும் உதவிய செய்ய இயலாத சூழல். ஆனால் எங்கள் "சொர்க்கபூமி தஞ்சாவூரு" குழுவின் சார்பாக உணவு வழங்கினோம்.

அப்பொழுது ஏழ்மை நிலையில் உள்ள மக்களின் நிலையை அதிகமாக உணர்ந்தோம் எனலாம். அதன் தொடர்ச்சியாக "பசியில்லாத தஞ்சாவூரு" என்ற ஒரு குழுவை உருவாக்கி தினசரி இலவசமாக உணவு வழங்கி வருகிறோம்.

இந்த பயணத்தில் நீங்கள் பங்குபெற



விரும்பினாலும் எங்களை அழைக்கலாம். உதாரணத்திற்கு உங்கள் பிறந்தநாள், உங்கள் மனைவி, பிள்ளைகள் பிறந்த நாள், திருமண நாள், பெற்றோர்களின் பிறந்த நாள், நினைவு நாள் போன்ற நாட்களில் ஆண்டுக்கு ஒருமுறை கூட நிதி உதவி செய்து பிறர் பசியை போக்கலாம்.

அல்லது தங்கள் வீட்டில் சமைத்து அதை முதியோர் இல்லங்கள், சாலையோர மக்களுக்கு வழங்க நினைத்தாலும் எங்களை நீங்கள் அணுகலாம்.

இனிய பொங்கல் நல்வாழ்த்துகள்!

—

திரு. ஆறுமுகம் கணேசன்,
நிறுவனர் - பசியில்லா தஞ்சாவூரு,
பகிரி: +91 98941 50472
மின்னஞ்சல்:
*arumugham85@gmail.com*

# இப்பூவுலகைக் காண விரும்பிய தாயே!

ஆதியிலே நல் எண்ணத்தை விதைத்து
உணர்த்தியவளே

கடலும் வானும் போற்றும் வண்ணம்
கனா கண்டவளே

கதிரும் நிலவும் வியக்கும் வண்ணம்
சிறந்தோங்கி வளர்த்தவளே

திடமும் உரமும் கூடி பிரகாசிக்க ஒளிரும்
பெருஞ்சுடரே

தானுயரவே ஓயா உழைப்பின் மூலம்
உலகைக்காண புவி மீது வந்தவளே

கரும்பினும் நறுசாற்றினிலே
இனிமையாக போதிப்பவளே

உன் சிந்தையில் மலர்ந்த மாண்பாய்
தமிழை போதித்த போதி மரமே

அமைதியை விட உயர்வான மகிழ்ச்சி
தாய்மடியே

தாமரைப் போல முகம் மலர்ந்து
சென்னியிடை சிந்தை மலரடி நீ

அகிலம் மணக்கும் நம் வாழ்வினிலே
அடியாலின் மனம் குளிருதடி

திணையளவே இன்னல் கொண்டாலும்
துவளாமல் அரவணைத்தவளே

பனையளவே துயரங்கள் தீச்செயல்கள்
எமை நாடாதே உன் மந்திர சொல்
போதுமடி

புலம்பெயர்ந்தே போனாலும்
அகமலர்ந்து போற்றி வரவேற்பாயடி எம்
தாயே!

இப்பிறவி ப்பயனை அடைவதற்கு
மீண்டும் ஓர் தாய் மடியில் தவழ வாய்ப்பு
கிடைக்குமா கொடுத்தடிமைக்கு!!

—

எழுத்தாளர்,
சோபனா பன்னீர்செல்வன்,
அரியலூர்.

சிவ!! சிவ!!
திருவாசகம் முற்றோதல்,
பன்னிரு திருமுறை
முற்றோதல்



சிவ. ச. சரவணன்,
மாகாளிபுரம், ஐயம்பேட்டை,
தஞ்சை மாவட்டம்.
தொடர்புக்கு: 9865564520



ஓவியம்:
**ராஜேஸ்வரி பாலு**



ஓவியம்:
**பொன்மணி மேகலை**

அனைத்து
மொபைல்
பிரச்சனைகளுக்கும்
ஒரே இடத்தில் தீர்வு!

தமிழ்
மொபைல்ஸ்
சேல்ஸ் & சர்வீஸ்

மிக நியாயமான
கட்டணத்தில்,
உத்திரத்தவாதத்துடன்.

பொங்கல்
திருநாள்
வாழ்த்துகள்!!

கரந்தை, தஞ்சாவூர்
+91 9789385552

TAMIL MOBILES OFFER SALE!!!

LIMITED TIME
OFFER
ONLY

FULL TEMPER
₹39
ONLY *

TOUCH DISPLAY
₹799
ONLY *

+91 97893 85552
TAMIL SANGAM COLLEGE, BUS STOP,
KARANTHAI, THANJAVUR.

தமிழ்
மொபைல்ஸ்
சேல்ஸ் & சர்வீஸ்

TAMIL MOBILES
TECH SOLUTIONS
ONE POINT FOR ALL YOUR MOBILE PROBLEMS

with
advanced
technology
that will
amaze you.

# வெளித்தோற்றத்தைக் கொண்டு யாரையும் எடை போடாதீர்!!!

*தமிழ் உறவுகள் அனைவருக்கும் இனிய ஆங்கிலப் புத்தாண்டு மற்றும் தைப்பொங்கல் வாழ்த்துகள்.*

*இந்த கட்டுரையில் எனது சொந்த அனுபவத்தோடு பொருந்திப் போன ஒரு திருக்குறள் விடயத்தை தான் கூற போகிறேன். தலைப்பில் பார்த்தது போல இக்காலத்தில் மட்டுமல்ல எக்காலத்திலும் வெளித்தோற்றத்தை கொண்டு யாரையும் நம்பி விட முடியாது.*

*மிக நேர்த்தியாக உடை அணிந்து நவநாகரீகமாக நடந்து கொள்ளும் பலர் உள் மனதில் வஞ்சகர்களாகவும் ஏமாற்று பேர்வழிகளாகவும், துரோகிகளாகவும் இருப்பதை அனைவரும் அனுபவத்தில் நிச்சயமாக ஒருமுறையாவது உணர்ந்திருப்போம்.*

*அதே போல மிகவும் எளிமையாகவும் ஏழ்மையாகவும் தோற்றத்தில் இருப்போர் பலர் மிகவும் உயர்ந்த மனிதர்களாக இருப்பதையும் வாழ்க்கை நமக்கு உணர்த்தி இருக்கிறது. சரி நீங்கள் சொல்வதை ஏற்றுக் கொள்கிறோம் நீங்கள் அப்படித்தான் இருக்கிறீர்களா என்று நீங்கள் கேட்பது புரிகிறது.*

*ஆமாம் என்னை அப்படி இருப்பதற்கான ஒரு நிகழ்வு என் வாழ்வில் நடந்தது. அது பசுமரத்தாணி போல என் மனதில் பதிந்து விட்டது. நான் ஒன்பதாம் வகுப்பு படிக்கும் பொழுது  ஒட்டுமொத்த வகுப்பில் வகுப்பில் இரண்டாவது மாணவியாகவும், மாணவிகளினல் முதல் மாணவியாகவும் வருவேன் பாடங்களில், தேர்வுகளில் வருவேன். விளையாட்டு எப்போதும் வராது.*

*அடிக்கடி சளி பிடிக்கும் நோஞ்சான் பெண். அப்பொழுது புதிதாக வெளியூரில் இருந்து எங்கள் ஊருக்கு குடி வந்திருந்த ஒரு பெண் எங்களது வகுப்பில் வந்து சேர்ந்தார். அவர் பெயர் ஸ்ரீதேவி. பெயரை கேட்டதுமே அனைவருக்கும் மனதில் நாடிகை ஸ்ரீதேவி நினைவில் வருவது அனிச்சை செயல்.*

*அதேபோலத்தான் நானும் ஸ்ரீதேவி என்ற பெயரை கேட்டதும் என் மனதிலலும் பதிய வைக்கப்பட்ட அந்த அழகிய முகம் வந்து போனது. எங்களோடு வகுப்பில் சேர்ந்த தோழி ஸ்ரீதேவி நல்ல அழகிய கருப்பு நிறம் . பளிச்சென வெள்ளை பற்கள் தெரிய படபடவென*

சிரித்து பேசுபவள்.பார்ன் லோவ்லி விளம்பரங்களால் வெள்ளை தான் அழகு என குமரிகள் முதல் கிழவிகள் வரை நஞ்சு ஊட்டப்பட்டிருந்த காலம் அது. இப்போது இல்லையா என்று கேட்காதீர். அதை பற்றி தனியாக ஒரு கட்டுரை பிறகு தருகிறேன்.

அந்த வயதில் பதின்பருவ மாணவிகளுக்கே உள்ள குறும்பில் அவள் முன்னால் இல்லாவிட்டாலும், பின்னால் ஸ்ரீதேவி என்று அவளது பெயரையும் அவருடைய நிறத்தையும் ஒப்பிட்டு நான் கேலி செய்திருக்கிறேன். நாட்கள் செல்லச் செல்ல கொஞ்சம் கொஞ்சமாக நானும் ஸ்ரீதேவியும் நல்ல தோழிகளானோம். அவளுடைய கையெழுத்து முத்து முத்தாக அழகாக இருக்கும். படிப்பிலும் படுகெட்டி.

எனக்கு போட்டியாக அவள் படிப்பாள். ஆனால் கொஞ்சம் கூட பொறாமை இல்லாமல் என்னோடு பழகுவாள். அவளுடைய குணம்  எனக்கு ரொம்ப பிடித்து போனது. என் மீதும் ஸ்ரீதேவிக்கு கொள்ளை பிரியம். எங்கள் பள்ளியில் படித்த நாங்கள் அனைவரும் எங்கள் கிராமத்தைச் சேர்ந்தவர்கள். உறவினர்கள் கால்நடையாகவோ அல்லது இருசக்கர வாகனத்தில் பள்ளிக்கு வருபவர்கள்.

அவளும் பள்ளிக்கு நடந்து தான் வருவாள். நெருக்கமான பின் அவளுடைய விடயங்களை என்னோடு பகிர்ந்து கொள்ள தொடங்கினாள் உங்களுக்கு தெரியும் ஒன்பதாம் வகுப்பு படிக்கும் எல்லோ சிறுமிகளும் பதில் பருவத்தில் இருப்பார்கள். அம்மா அப்பா பூ போல தங்குவார்கள். எந்த வேலையும் பெரும்பாலும் செய்வதில்லை.

எப்படியும் பத்தாம் வகுப்பு அல்லது பன்னிரண்டாம் வகுப்போடு நிறுத்திவிட்டு திருமணம் செய்து வைத்து விடத் தான் போகிறார்கள் கிராமத்தில்.பொத்தி பொத்தி வைத்து நெறைய கட்டுப்பாடுகளுடன் தான் பெண்கள் வளர்க்கப்பட்டார்கள்.

சிறுவயதிலிருந்தே எங்கள்  அம்மாவிற்காக நிறைய வீட்டு வேலைகளைச் செய்து பழக்கப்பட்டதால் பள்ளிக்கு வருவதற்கு முன்பு குடம் குடமாக குழாய் தண்ணீர் பிடித்து வைத்துவிட்டு பாத்திரங்கள் கழுவிவிட்டு, சாணம் தெளித்து கோலம் போட்டு நிறைய வேலைகளைச் செய்து விட்டு தான் நான் பள்ளிக்கு போவேன். நான் பெரிய ஒரு விடயமாகத்தான் நினைத்துக் கொண்டிருந்தேன் அப்பொழுது.

ஸ்ரீதேவிக்கு அம்மா அப்பா இரண்டு பேரும் இல்லை. தனது பெரியப்பாவின் அனுசரணையில் அவருக்கு உதவியாகவும் அதே சமயம் படிக்கவும் எங்கள் கிராமத்திற்கு வந்திருந்தாள். அவர் பெரியப்பா ஒரு சிறிய பெட்டி கடை வைத்திருந்தார்.

காலையில் எழுந்து வீட்டு வேலைகளையும் செய்து சமையலையும் செய்து வைத்து விட்டு

தான் ஸ்ரீதேவி பள்ளிக்கு வருவாள். மீண்டும் மலை வீட்டு வேலைகள் செய்துவிட்டு கடையையும் பார்த்துக் கொள்வாள். கடையில் தனியாக இருக்கும்போது ஊரில் உள்ளh கேடுகெட்ட தறுதலைகள் சாடைமாடையாக அவளிடம் செய்யும் சண்டித்தனங்களையும் சொல்லியிருக்கிறாள். அப்போது சரியாக எனக்கு விளங்கவில்லை. பின்னாளில் அவளின் துன்பங்களையும் அவளின் துணிச்சலையும் எண்ணி கொள்வேன்.

இத்தனை கடுமையான நெருக்கடிக்கிடையில் நன்றாக படிக்கவும் செய்தாள் ஸ்ரீதேவி. இதையெல்லாம் அவள் என்னிடம் முதல் முறையாக சொன்னபோது நான் மலைத்துப் போனேன். ஒரு தாயாக, ஒரு குடும்பத்தின் தலைவியாக, எல்லாமுமாக அவள் அந்த 13 வயதில் நடந்து கொண்டது எனக்கு மிகப்பெரிய வியப்பாக இருந்தது.

அந்த நிமிடத்தில் அவள் பெயரை வைத்து அவளை எடை போட்ட அவள் நிறத்தை வைத்து அவளை கேலிச்செய்த எனது செயலை எண்ணி மனதிற்குள் வெட்கி தலை குனிந்தேன். அப்பொழுது ஒரு முடிவு செய்து கொண்டேன் இனிமேல் வாழ்க்கையில் வெளி தோற்றத்தை வைத்து யாரையும் எடை போடக்கூடாது என்று.

பன்னிரண்டாம் வகுப்பு முடிந்த பிறகு நான் படிப்பதற்க்கே போராட வேண்டிய நிலை.எந்த பலமும் இல்லாத எனக்கு செய்யத் தெரியவில்லை. அவளுடைய சூழ்நிலை காரணமாக அவளால் மேற்கொண்டு படிக்க இயலவில்லை. திருமணம் செய்து கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கிறாள். இன்று வரை அவளோடு பேச எனக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை.

ஆனால் அன்று ஸ்ரீதேவி எனக்கு கற்பித்தபி பாடம் "வெளித்தோற்றத்தைக் கொண்டு யாரையும் கூடவோ குறைத்தோ எடை போட்டு விடக் கூடாது". அது எனக்கு இன்றும் எப்பொழுதுமே யாரையும் சந்திக்கும் பொழுதும் நினைவில் வந்து எனக்கு அறிவுரை சொல்லிச் செல்லும்.

திருவள்ளுவர் இந்த குறைத்து எடை போடுவது என்பதை பற்றி ஏதாவது சொல்லி இருக்கிறாரா என்று நான் ஒரு ஆர்வத்தோடு தேடிய பொழுது எனக்கு பின்வரும் குறள் கிடைத்தது. திருவள்ளுவர் சொல்லி வைக்காத விடைகள் தான் உண்டா என்ன?

கணைகொடிது யாழ்கோடு செவ்விதுஆங் கன்ன
வினைபடு பாலால் கொளல்.

குறள் # 279
பால்: அறத்துப்பால்
அதிகாரம்: கூடாவொழுக்கம்

இக்கருத்தை விளக்க வள்ளுவர் அம்பையும் யாழையும் ஒப்பிடுகிறார். அம்பு நேரான வடிவம் உடையதானாலும் செயலிலோ கொடியது; இசைக்கருவியான யாழ் தன் வடிவத்தில் வளைவுடையது. ஆனால் செயலிலோ செவ்வியது-இனிய இசை தரவல்லது; அது போலத் தோற்றப் பொலிவுடைய வஞ்சகர்கள் கொடியராய் இருப்பர். வளைந்திருந்தாலும், யாழின்கோடு நன்மை பயப்பது போலத் தோற்றப் பொலிவற்றவர்கள் உண்மையானவராய் இருப்பர் என விளக்கமும் தருகிறார்.

அம்பானது பார்ப்பதற்கு அழகாகத் தோன்றினாலும் அதன் தொழில் கொடியது; கொல்வது. யாழினது கொம்பு வளைந்து தோன்றினாலும் இனிய இசை தருவதில் சிறந்ததாக இருக்கிறது. அவ்விதமே மக்களுள்ளும் வெளிக்கோலங்களைப் பொருட்படுத்தாமல் அவர்களின் செயல்களைக் கண்டு அவர்கள் மதித்தற்கு உரியவர்களா அல்லரா என்று தீர்மானித்தல் வேண்டும்.

பொருள்களின் வடிவும் செயலும் எப்படி ஒத்திசைந்து செல்ல வேண்டியதில்லையோ அதுபோன்று மனிதர்களின் உருவமும் அவர்களது குணமும் ஒன்றுபட்டிருக்க வேண்டியதில்லை. அவர்களின் செயற்பாடுகளிலிருந்து அவர்களது ஒழுக்கம் பற்றி அறியவேண்டும்.

ஐயன் திருவள்ளுவன் சொல்லாத விடயமும் உண்டா என்ன? வேறொரு அனுபவத்தோடும் வேறொரு குறளோடும் அடுத்த கட்டுரையில் சந்திப்போம்.

—

இளவரசி இளங்கோவன்
மொன்றியல், கனடா



மின்னிதழ் வடிவமைப்பு:
துளிர்
www.thulir.in/portfolio

# உழவுக்கும் உழவருக்கும்...

(எண்சீர் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

உப்பிட்டு உண்ணுகின்ற சோறு தந்த
... உழவுக்கும் உழவனுக்கும் விடிவு எங்கே!

தப்பிவிடும் காலமல்ல வாழ்வில் நாளும்
... தானியங்கள் பொய்த்திடவே வயிறும் காயும்

குப்பிகளில் உணவுகளாம் தின்னச் சாகும்
... குப்பைகளாய் வயிறுண்டு நோயில் வீழும்

தப்பிக்க வழியின்றி மரணம் கவ்வும்
... தரைமீது புல்முளைக்க காண்பார் யாரோ!

வந்துநின்ற இளையோரே போன தெங்கே
... வந்துவிட்ட கேளிக்கை நிகழ்வில் மூழ்கி

தொந்திவளர்க் குங்கூட்டத் தோடே நின்று
... தொலைதூரம் போனதென்ன சொல்லு நீயே

வந்துவிழா வட்டியிலே இனியும் சோறு
... வக்கனையாய் தொலைக்காட்சி காண்ப தென்ன

வந்துகுதி போர்களத்தில் உழவை மீட்க
... வந்தனைசெய் உழவுக்கும் வளங்கள் கூட்டி!

இளைஞர்காள் எழுவீரே வீறு கொண்டு
... இனியுலகில் உழவுக்கு கேடில் லைதான்;

களைவீரே தந்திரங்கள் நரிகள் செய்ய
... காத்திடுவோம் உணவுண்ண நாளை மக்கள்

தலைமுறைகள் வாழ்ந்திடவே உழவு காப்போம்
... தண்ணீரை சேமிக்க வழிகள் காண்போம்

மலையெனவே எழுந்துநின்று மண்ணைக் காப்போம்
... மறத்தமிழர் என்றுணர்ந்து மகிமை செய்வோம்!

—

கவிமாமணி. கவின்முருகு



# இளைஞனே!!!!

உணவு வேண்டும், உணவு வேண்டும்,
எல்லோருக்கும் உணவு வேண்டும்.
மாரி இங்கு மறைந்தாலும்
மண்ணில் உள்ள எல்லோருக்கும்
உணவு வேண்டும் உணவு வேண்டும்.

பசி எடுத்து புசிக்க நீயும்
மண்ணின் வளம் காத்திடு,
மண்ணின் வாழ்வை நீடிக்க,
பிளாஸ்டிக்கை நீயும் தவிர்த்திடு.

பாரத நாட்டு மைந்தனே!
இந்த மண்ணின் வேருக்கு நீரூட்டு.
வெற்றி பெற தீரனே,
உன் பாரம்பரியம் அனைத்தையும்
சீராட்டு.

சில தானியங்கள் விளைத்திடு,
சிறு தானியங்கள் விளைத்திடு.
கலப்பிலா காய்கறியை தந்திடு,
கனியை நீயும் சேர்த்திடு.

துரித உணவை தவிர்த்திடுவாய்,
துயரை இங்கு தவிர்த்திடுவாய்
உடற்பயிற்சியை செய்திடுவாய்
உடல்நலம் யாவையும் பெற்றிடுவாய்.
புகையும் மதுவும் வேண்டாமே,
உன் ஆயுளை இங்கு குறைத்திடுமே.
போதை மருந்து வேண்டாமே,
உன் குடும்பத்தை இங்கு உடைத்திடுமே.

மொழிப்பயிற்சி செய்திடுவாய்,
தமிழில் நீயும் பேசிடுவாய்.
மற்ற மொழிகள் கற்றாலும்
தாய்மொழியை முன்னில் நிறுத்திடுவாய்.

கடல் கடந்து சென்றிடுவாய்,
பாரம்பரியத்தை காத்திடுவாய்.
பாரத நாட்டின் பெருமையை
அன்னிய மண்ணில் பரப்பிடுவாய்.

சங்க இலக்கியம் இங்குண்டு.
மரபு கண்டர் பலருண்டு.
நம் இலக்கண வழி காப்பியத்திற்க்கு
ஈடு இணை எங்குண்டு.

புத்தகம் எழுது, புத்தகம் எழுது,
புதுமையை திரட்டி புத்தகம் எழுது.
வளர்ச்சி பெற்று என்றும் வாழ,
தளர்ச்சியில்லா சமூகம் பெற,
அறிவையும் பண்பையும் சேர்த்து
எழுது,
இது அணையா விளக்கு என்பதை
உணர்த்து.

—

முனைவர். திருமதி. உமா
லக்ஷ்மி நரசிம்மன்,
ஆசிரியை,
அலைபேசி எண்: 9962598300

# பெய்யும் மழை மிதமானால்

உழவர் நிலை மகிழ்வாகும்
பெய்யும் மழை கனமானால்
ஏரி குளங்கள் கரை உடையும் !!

முரசு கொட்டி வரும் மழையால்
அரசு கூட விழித்துக் கொள்ளும்
நின்று பெய்யும் அடை மழையால்
நாற்றுகள் இங்கே மூழ்கி போகும் !!

கால நிலை மாற்றத்தாலே
சோக நிலை தொடர்கிறது
வான்வெளியை நாம் காத்தாலே
இயற்கைவளம் நமை காத்திடுமே !!

—

**கோ. தனபாலகிருஷ்ணன்,**
தஞ்சாவூர்.




**ரா. வர்ஷினி**
**5ஆம் வகுப்பு,**
**வெங்கடேசுவரா மெட்ரிகுலேசன் பள்ளி,**
**கச்சனம், திருவாரூர்.**


MODERN CARDS
& PRESS
BACK TO SCHOOL
SCHOOL ADMISSION OPEN FOR 2024
ENROLL NOW!
ZEEVECTOR.COM PUBLIC SCHOOL
Certificate of Merit
LOVELY KIDS
Progress Report
National Public Sr. Sec. School
1644, South Main Street,
ANM Medical Upstair,Thanjavur - 1.
Email : moderncardsjk@gmail.com
9894757272
9345890800

# நேர மேலாண்மை



நேரத்தின் அவசியத்தை புரிந்து கொண்டவர்கள் மட்டுமே வாழ்வில் பிரகாசிக்கின்றனர்.

“காலம் பொன் போன்றது” என்பது பழமொழி. “காலம் உயிர் போன்றது” என்பது புது மொழி. பொன்னை இழந்தால் மீண்டும் வாங்கிக்கொள்ளலாம்.

காலத்தை தொலைத்து விட்டால் மீண்டும் ஒரு போதும் பெற முடியாது, எனவே அது உயிர்க்கு சமம் எனப்படுகிறது. உலகத்தில் இன்று வெற்றி பெற்ற எல்லா மனிதர்களும் காலத்தின் அருமை உணர்ந்து அதனை சரியாக திட்டமிட்டு உழைத்து வெற்றி பெற்றவர்களே.

உலகில் பணம் இல்லாமல் சிரமப்படுகிறவர்கள் கொஞ்ச பேர்தான். நேரம் இல்லாமல் அவதிப்படுபவர்களே அதிகம். இவர்கள் வீட்டைக் கவனிக்க நேரமே இல்லை என்கிறார்கள். அலுவலக பணிக்கு நேரம் போதவில்லை என்கிறார்கள்.

திறமை இருக்கிற நீங்கள் ஏன் புதிய முயற்சிகளில் இறங்கக்கூடாது என்றால் எங்கே நேரம் கிடைக்கிறது என்று சொல்கிறார்கள். ஐந்து நிமிடம் ஒதுக்கி உடற்பயிற்சி செய்திருந்தால் இப்படி ஊளைச் சதைப் போட்டிருக்காதே என்று கேட்டால்... ஐந்து நிமிடத்திற்கு எங்கே போவேன் என்கிறார்கள்? உண்மையிலேயே நேரம் என்பது இல்லையா? இல்லை இருக்கிற நேரத்தை நாம் சரியாக பயன்படுத்திக் கொள்ள முடியவில்லையா? என்பது கேள்வியாக உள்ளது.

இந்த வேலையை செய்ய நேரம் இல்லை என்று சாதாரண மனிதர்கள் சொல்லும் போதே அந்த செயலை நேரத்தை ஒதுக்கி இந்த உலகில் பல பேர் வெற்றிகரமாக செய்து கொண்டுள்ளனர்.

இந்த நாட்டின் பிரதமருக்கும், முதல் அமைசர்களுக்கும், உலகத்தின் முதல் பணக்காரர்களுக்கும், வெற்றியாளர்கள்களுக்கும் ஒரு நாளைக்கு இருபத்தி நான்கு மணி நேரம் தான். அதில் இயற்கை எந்த பேதமும் வைப்பதில்லை. அனைவருக்கும் ஒரு நாளைக்கு இருபத்தி நான்கு மணி நேரம் தான். ஒரு வித்தியாசம் அவர்களுக்கு நேரத்தை எப்படி சரியாக திட்டமிட்டு பயன்படுத்துவது என்பது தெரிந்துள்ளது. நமக்கு தெரியவில்லை அவ்வளவுதான்.

நேர மேலாண்மையை புரிந்து கொண்டால் எல்லோருக்கும் நேரம் இருக்கும். முதலில் நேரத்தை நிர்வகிக்க திட்டமிட வேண்டும்.நாளைய பணியை இன்றே திட்டமிடுவது சிறப்பு. அந்த நாள் முடிந்ததும் திட்டமிட்ட பணி முடிக்கப்பட்ட தா? அல்லது முடியா விட்டால் ஏன் முடியவில்லை, அதற்கான காரணம் என்ன என ஆராய்ந்து சரி செய்தால். நேரம் வீணாகாது. *TO DO LIST* எப்போதும் நம்மிடம் இருக்க வேண்டும்.

அதில் வரிசையாக நாம் செய்ய வேண்டிய பணிகள் அதன் கால வரம்பு ஆகியவை குறிக்கப்பட்டு இருக்க வேண்டும். பணி முடிந்ததும்,அந்த பணி நீக்கப்பட்டு, புதிய பணிகள் வரிசையில் சேர்க்கப்பட வேண்டும். முன்பெல்லாம் இதற்கு சிறு டைரி பயன்படுத்தப்பட்டது. இப்போது செல்போன் மற்றும் நோட் பேட் பயன்படுகின்றன. அவசியமான அவசரமான பணிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். கேளிக்கை மற்றும் நேர விழுங்கிகள் தவிர்க்கப்பட வேண்டும். பயண நேரங்களை பயனுள்ளதாக (இணைய வழி பணிகள்) போன்றவற்றை செய்வது, நேரத்தை மிச்சப்படுத்தும்.

நேரம் என்பது பணம் என்பதை உணர்ந்து நேரம் வீனானாள் பணம் வீணாகிறது என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

எல்லா வேலைகளையும் தானே இழுத்து போட்டு கொண்டு செய்வது, நேரத்தை வீன் செய்து மன உளைச்சலையும் உருவாக்கும்.

அடுத்தவர்களிடம் வேலை வாங்கும் கலை *(Decentralisation of work)* தெரிந்தால் மட்டுமே நேர நிர்வாகம் சிறக்கும்.

முடியாத காரியம் எனில் முடியாது *(NO)* சொல்ல தயங்கக் கூடாது, அதனை அடுத்தவர் மனம் புண்படாதபடி சொல்ல வேண்டும். எல்லா வேலைகளையும் தானே இழுத்து போட்டு கொண்டு நேரம் போதவில்லை என்பது சரியன்று.

நேரத்தின் அருமையை புரிந்து கொள்ளுங்கள்,அதனை சரியாக கையாளுக்கள், இந்த ஆண்டின் வெற்றியாளரில் நீங்களும் ஒருவர்.

—

முனைவர் சா.சம்பத்,
தேசிய பயிற்சியாளர்,
மன்னார்குடி.

# வேண்டுவதும் வேண்டாததும்

புத்துணர்ச்சி
கொடுக்கும்
பொழுதுபோக்கும்

தனித்திறன்
வளர்த்தலும்
வெளிப்படுத்தலும்

நல்ல நினைவுகள்
கொண்டு சந்தோசப்படலும்

நாளையவை
பற்றி நம்பிக்கை
கொள்ளுதல்
வேண்டுவதாயும்

எதிர்மறை சிந்தனை
வளர்த்து
பயம் கொள்ளுதல்

இழந்த கதையை
நெடுந்தொடராயாக்கி
சோகம் கொண்டாடுதலும்

எதிர் கொள்ள வேண்டியவைக்கு
இப்போதே
பதட்ட படுதலும்

வேண்டாதவை
தனித்திருக்கையில்

------------

## யோசித்துப் பார்க்கையில்

கடந்த கால
நிகழ்வுகளை
எண்ணுகையில்

பயந்து கொண்டிருந்த
விஷயங்களும்

சிரமப்படுத்தும்
என எண்ணியவைகளும்

மிகச்சிறப்பு என
யோசித்தவைகளும்

கிடைத்தால்
மிக்க மகிழ்ச்சி
என்பதுகளும்

நடந்த கணத்தில்
பெரும்பாலும்
அத்தனை
வேதனையும்
துக்கத்தையும்
சந்தோஷத்தையும்
பெருமிதத்தையும்
கொடுத்ததில்லை

ஆனால்
என்ன ஆச்சார்யம்
மீண்டும்
நடக்க இருப்பவைகள்
பற்றி அதே
பயம்
பதட்டம்
மகிழ்ச்சி எதிர்பார்ப்பு

------------

## மீண்டும் மீண்டும் எனில்

முதல் முதலில்

கருத்து மோதலில்
வாக்குவாதம்
மீண்டும் எனில்
அமைதி காத்தல்

செயல் தோல்வியில்
சோகம்
மீண்டும் எனில்
காரணம் அறிதல்

வெற்றியில்
உள்ளத்து உவகை
மீண்டும் எனில்
பெரிய இலக்கு

புறக்கணிப்பில்
வருத்தம்
மீண்டும் எனில்
விலகுதல்

கண்டு கொள்ளா பேச்சில்
ஆச்சார்யம்
மீண்டும் எனில்
பேச்சை நிறுத்துதல்

------------

## அது வேண்டாமே

இருவர் பேசிக்கொண்டிருக்கையில்
எதிர் மனிதர்க்கு
பிடிக்காதவர் பற்றிய
உயர் எண்ணங்களையும்
உதவும் பாங்கையும்
பிரச்சனைகளுக்கு
சொல்லும்
எளிய தீர்வு பற்றியும்
திறம்பட செயல்படுவது
பற்றியும்
சாதனைகளையும்
முன் யோசனை பற்றியும்
நல்ல குணத்தையும்
சொல்ல வேண்டாமே

அது நாகரிகம்
கருதி மட்டுமல்ல

கொண்டிருக்கின்ற
மனம் முழுவதும்
இருக்கின்ற
எதிர்மறை எண்ணத்தால்
அபிப்பிராயம்
மாறப்போவதில்லை

கூடுதலாய்
அது பற்றிய
வாக்குவாதம் முற்றி
இருக்குவரிக்குமிடையே
மனக்கசப்பு வர
வாய்ப்புள்ளது

------------

## முடியுமா?

'உற்சாகமானமானதை'
'சந்தோஷமானதை'
'சோகமானதை'
'இழந்ததை'

முகநூலிலும்
புலனத்திலும்
பகிர்ந்ததை
வைத்து

பகிர்ந்தவரின்
மன நிலை அறிய முடியுமா?

பகிர்ந்தது தனக்கு பிடித்ததாகவும்
மனதை தொட்டததாகவும்

அவரின் தினசரி நிஜங்கள்
வேறு விதமாயும்
இருக்கலாம்....

------------

## இரண்டும் ஒன்று தான்...

அவசரத்துக்கு
உதவி கேட்கையில்
தற்போது இயலாது
பின்னர் பார்க்கலாம்

உடனடியான
முடிவுக்கு யோசனை
கேட்டால்
இப்போது முடியாது
அப்புறம் சொல்கிறேன்

இதை முடித்தால் தான்
அடுத்த கட்ட நகர்வு
சாத்தியம் என்கையில்
வேறு பணி உள்ளது
முடித்தவுடன் பார்க்கலாம்

------------

## நேற்றிலிருந்து...

தெருமுனை
கடக்கையில்
இங்கே
எத்தனை சகாக்களுடான
கூட்டம் நடந்திருக்கிறது

ஆற்றங்கரை
பார்க்கையில்
இங்கே
தனித்து எவ்வளவு
யோசித்திருக்கிறோம்

திருமணமண்டபம்
காண்கையில்
எத்தனை திருமணங்களில்
உறவுகளோடு
அரட்டை அடித்திருக்கிறோம்

திரையரங்கம்
கடக்கையில்
எத்தனை படங்களுக்கு
அதன் நிஜம் தாண்டி
வசனங்களையும்
காட்சிகளையும்
முடிவையும்
யூகித்து
நண்பர்களிடம்
பகிர்ந்திருக்கிறோம்

ஆலயம்
நோக்குகையில்
குழுவாயும்
தனித்தும்
அத்தனை சிக்கலுக்கும்

உடனடியாய்
தீரவு வேண்டி
இறையிடத்து
நீண்ட பிரார்த்தனை
செய்திருக்கிறோம்

என நேற்றைய
நினைவுகள்
இன்றைக்கு
ஞாபகச்செல்களில்
பத்திரப்படுத்தியதால்

இன்றையவைகளும்
பதிய வைத்தால்
நாளையும்
எண்ணி மகிழலாம்

------------

## அந்த வார்த்தைகள்...

பலமான திறன்
உள்ள பணி
நொண்டியடுக்கையில்

தோள் கொடுப்பார்
என எண்ணியவர்
தவறு செய்து சறுக்கையில்

சரியான யூகம்
என நம்பிக்கை
கொண்டவை
சாதகமாத நிலையில்

நன்றாக செய்திருக்கிறோம்
என்ற எண்ணம் கொள்கையில்
முற்றிலும் எதிர்பாரா
எதிர்மறை விமர்சனமாகையில்

இது முடிந்தால்
அது எளிது
என்று நினைக்கையில்
முன்னது முடிந்து
பின்னது
இழுத்துக்கொண்டே
போகையில்

அந்த வார்த்தைகள்
'என்ன இது
உள்ளுக்குள்ளே...

------------

## அந்த கணத்து உணர்வுகளாய்

நாளைய பணிகள்
நல்லபடியாய் முடியும்

ஆகச்சிறந்த சேவை
கொடுக்க முடியும்

புதிய பணி
எடுக்க முடியும்

இன்று போல்
நாளையும்
தோல்வி தான்
ஏற்படுமா?

கிடைத்த
அவமானங்கள்
தொடருமா?

திட்டமிட்ட பணிகள்
முடியாமால்
சேர்ந்து கொண்டே
போகுமா?

இப்படி
இன்றைய
நிஜங்களின்
தாக்கத்தால்

சிந்தனை
தனிமையிலே

------------

## அதெல்லாம் கூட...

எதிர் மனிதர்
கோபமாய்
வசை மொழி
பாடிக்கொண்டிருந்தாலும்

மகிழ்ச்சியில்
ஆர்ப்பாட்டம்
கொண்டிருந்தாலும்

பிறரைப்பற்றி
விமர்சித்துக்கொண்டிருந்தாலும்

பொதுப்பொருள் பற்றி
தன் கருத்தை
சொல்லிக்கொண்டிருந்தாலும்

கேட்பவர்
மௌனம் காத்தால்

அது அவருக்கு
ஏற்புடையது என்றும்
மட்டும் அர்த்தமில்லை

அவரின் புரிதல் அவ்வளவு தான்

அவரின் வேறு
பிரச்சனைகளின் தாக்கத்தால்

இந்த சந்தோசம்
அவருக்கு புதிது

கேட்க வேண்டிய
நிர்பந்தத்தால்

வாக்குவாதம் வேண்டாம்
என்ற எண்ணத்தால்

அவர் பேசும் விசயம்
நமக்கு அறியாததால்

அவர் விமர்சனம்
செய்பவர் பற்றி
நமக்கு தெரியாததால்

நாம் உடல் அங்கேயும்
புத்தி வேறு எங்கேயோ
இருப்பதால்

என பலப்பல காரணங்கள்
உண்டு

------------

## நீங்க வேணா...

மனதில் உள்ள
வருத்தத்துக்கும்

சோகத்துக்கும்
ஏமாற்றத்துக்கும்
உவகைக்கும்
ஏமாற்றத்துக்கும்
கோபத்துக்கும்
உடன்படாமையும்
வெளிப்படுத்தினால்
சிக்கல்கள் வரும்
என புத்தி சொல்வதை
உதடுகள்
வார்த்தைகளை
முழுங்கலாம்

ஆனா
கண்களும்
முகமும்
இதயத்துடிப்பும்
அந்த கணத்து
உணர்வை
மறைக்காமல்
வெளிப்படுத்தாமல்
இருக்குமா என்ன ?

------------

## முதலாமவராய்...

வாசிப்பு
யோசிப்பு
நாளைக்கான திட்டமிடல்
இன்றைய நிகழ்வு பற்றிய பார்வை
உறவு, நட்பு பற்றிய சிந்தனை
பொழுது போக்கு

என எத்தனையோ இருக்க


தனிமையிலே

முதலாமவராக
'கடந்த கால நினைவுகள்'

—

*A.S. சுந்தரராஜன்,*
மானாமதுரை
கைபேசி: ***9994920236***





**M.S. சன்மதி**
4ஆம் வகுப்பு,
ஸ்ரீ வெங்கடேசுவரா மெட்ரிகுலேசன்
மேல்நிலைப் பள்ளி,
தஞ்சாவூர்.

அனைவருக்கும்

# இனிய பொங்கல்

நல்வாழ்த்துகள்!!

சொர்க்கபூமி
தஞ்சாவூரு



பொங்கலோ!
பொங்கல்!!